முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம், மதுரை

முன்னிலை – **திரு. P. சரவணபவன், பி,ஏ., பி.எல்.,**

முதன்மை உதவி அமர்வு நீதிபதி, மதுரை

2026ம் ஆண்டு ஜுன் திங்கள் 24ஆம் நாள் புதன்கிழமை

**<u>அமர்வு வழக்கு எண்.446/2022</u>**

**<u>(CNR.No.TNMD08-004183-2022)</u>**

| | | |
|---|---|---|
| 1. | மேல்விசாரணைக்கு அனுப்பிய நீதிமன்றத்தின் பெயரும் வழக்கு எண்ணும் | நீதித்துறை நடுவர் எண்.6, மதுரை முதல்நிலை விசாரணை பதிவேட்டு வழக்கு எண்.192/2020 |
| 2. | குற்றமுறையீட்டாளர் | அரசுக்காக காவல் ஆய்வாளர், அண்ணாநகர் காவல் நிலையம், அண்ணாநகர் காவல் நிலைய குற்ற எண்.22/2020 |
| 3. | எதிரியின் பெயர் | ராஜ்குமார் என்ற கேரளா ராஜ்குமார் (வயது 24/20) த/பெ. மூப்பக்கரை |
| 4. | எதிரி மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் | இ.த.ச.பிரிவுகள் 392 உ/இ 397, 506(ii) |
| 5. | நீதிமன்றத்தின் முடிவு | எதிரி பிரிவுகள் 392 உ/இ 397 மற்றும் 506(ii) இ.த.ச. வின்படி குற்றிவாளி அல்ல என்று முடிவு செய்கிறது. |
| 6. | தீர்ப்பும் தண்டனையும் | முடிவில், எதிரியை இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 392 உ/இ 397 மற்றும் 506(ii)ன்படி தண்டிக்கப்படத்தக்க குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து எதிரியை கு.வி.மு.ச. பிரிவு |

| | | |
|---|---|---|
| | | 235(1)ன்கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. |
| 7. | வழக்கு சான்று பொருள் குறித்த உத்தரவு | S.C.No.450/2020 வழக்கில் அரசு தரப்பில் சமர்பிக்கப்பட்டு இந்நீதிமன்றத்தால் எடுக்கப்பட்டுள்ள RPR.No.72/2025ல் கண்ட சா.பொ.I – சுமார் 23 செ.மீ நீளமுள்ள கத்தி, சுமார் 19 செ.மீ நீளமுள்ள கத்தி ஆகியவை பயனற்றது என்பதால் அவைகளை மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் அழிக்கவும் உத்தரவிடப்படுகிறது. |

இந்த வழக்கானது இன்று 24.06.2026 அன்ற இந்நீதிமன்றம் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது தமிழக அரசுக்காக அரசு கூடுதல் வழக்கறிஞர் திரு.M.மகேஷ்குரு அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.R. ஜான்ஜெயசீலன் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலித்தும் இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## தீர்ப்புரை

இந்த வழக்கின் புகார்தாரர் / பாதிக்கப்பட்ட நபரான மணிகண்டன் என்பவர் மதுரை, கரும்பாலை, இந்திராநகர், அய்யனார்கோவில் தெரு, கதவு எண்.21/18ல் குடியிருந்து வருவதாகவும், வாதி மதுரை, மாட்டுத்தாவணி MGR பேருந்து நிலையத்தில் பூ வியாபாரம் செய்து வருவதாகவும் சம்பவ தேதியான 05.01.2020ம் தேதியன்று காலை சுமார் 07.00 மணியளவில் வாதி தனது வீட்டிற்கு தேவையான காய்கறிகளை வாங்குவதற்காக வாக்கர்ஸ் பார்க் ரோடு காய்கறி மார்கெட் கிழக்கு நுழைவு வாயில் அருகே நடந்து

சென்று கொண்டிருந்தபோது அங்கிருந்த இந்த வழக்கில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட எதிரி ராஜ்குமார் மற்றும் இவ்வழக்கு 1 முதல் 3 எதிரிகள் ஆகிய நான்கு பேரும் சேர்ந்து வாதியை பார்த்து டேய் நாங்க தண்ணியடிக்கணும் ஒழுங்கா கையில இருக்குற பணத்தை எடுடா என்று மிரட்டியும் 1வது எதிரி தினேஷ்குமார் தனது இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து வாதியின் வயிற்றில் வைத்து அழுத்தி மரணபயம் ஏற்படுத்தியும், 2வது எதிரி முத்துக்குமார், கேரளா ராஜ்குமார் மற்றும் அஜீத்குமார் ஆகியோர் வாதியை பார்த்து நாங்க பல கேசுல ஜெயிலுக்கு போய்ட்டு வந்தவங்க எங்களுக்கே பணம் இல்லைன்னு சொல்றீயா என்று சொல்லிக்கொண்டே எதிரி முத்துக்குமார் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து வாதியின் நெஞ்சில் வைத்து அழுத்தி மரணபயத்தை ஏற்படுத்தியும் வாதியின் சட்டப்பையில் இருந்த பணம் ரூ.1,325/—ஐ பறித்துக்கொண்டும் எதிரிகள் நால்வரும் சேர்ந்து தங்கள் கையில் வைத்திருந்த கத்தியை காண்பித்து எவனாவது எங்களை பிடிக்க வந்தால் உங்களையும் குத்தி குடலை உருவிவிடுவோம் என்று மிரட்டி உயிர்பயம் ஏற்படுத்தி குற்றமுறு கொலைமிரட்டில் விடுத்த குற்றத்திற்காக எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 392 உ/இ 397 மற்றும் 506(ii)ன்படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) மேற்படி வழக்கில் எதிரிக்கு கு.வி.மு.ச.பிரிவு 207—ன்கீழ் வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் மதுரை, குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.6 நீதிமன்றத்தில் வழங்கப்பட்டுள்ளது.

3) இந்த வழக்கு குற்றமானது அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கத்தக்கது என்பதால் மதுரை, குற்றவியல் நீதித்துறை நடுவர்

எண்.6 அவர்கள் இவ்வழக்கை மதுரை, முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு குவிமுச பிரிவு 209(அ)–ன்படி சமர்ப்பித்துள்ளார். மதுரை முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திலிருந்து இந்த வழக்கானது விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

4) இந்த வழக்கின் எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் இருதரப்பிற்கும் போதிய சந்தர்ப்பம் வழங்கப்பட்டு, இருதரப்பும் கேட்கப்பட்டு, இந்த வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டிற்கு போதிய ஆதாரம் இருப்பதாக முதல் நோக்கில் தெரியவந்ததால் எதிரி மீது இதச பிரிவுகள் 392 உ/இ 397 மற்றும் 506(ii)ன்படி குற்றச்சாட்டுக்கள் வனைந்து, அதை எதிரிக்கு விளக்கி கூறி வினவியபோது எதிரி குற்றச்சாட்டுக்களை மறுத்தார். அதனால் இந்த வழக்கில் சாட்சிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. அதனால் எதிரி மீது விசாரணை மேற்கொள்ளப்பட்டு தீர்வு காணப்பட்டுள்ளது.

5) இந்த வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் மற்றும் சா.பொ.1 – பட்டா கத்தி ஒன்று சான்று பொருளாக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

<u>அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள்படி தெரியவரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் : –</u>

6) அ.சா.1 மணிகண்டன் என்பவர் தம்முடைய நீதிமன்ற சாட்சியத்தில் தான் மதுரை இந்திரா நகரில் குடியிருந்து வருவதாகவும், பூ வியாபாரம் செய்து வருவதாகவும், ஆஜர் எதிரியை தனக்கு தெரியாது என்றும்

தன்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் மட்டும் தன்டையது தான் என்றும் வழக்கு சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும் போலீஸார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

7) அசா.2 – வெங்கடேசன் என்பவர் தம்முடைய நீதிமன்ற விசாரணையின்போது தான் தற்போது அண்ணாநகர் காவல்நிலையம் சட்டம் ஒழுங்கு காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், இதற்கு முன்னால் காவல் ஆய்வாளராக பணியில் இருந்த ஆய்வாளர் ரமணி அவர்கள் கையொப்பம் தனக்கு நன்கு பரிச்சயம். கடந்த 05.01.2020ம் தேதி நிலையப்பொறுப்பில் இருந்த சார்பு ஆய்வாளர் பூமிநாதன் என்பவரிடம் மதுரை கரும்பாலையை சேர்ந்த மலைச்சாமி என்பவர் மகன் மணிகண்டன் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப்பெற்று புகாரின் தன்மைக்கேற்ப முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், அவர் பெற்ற புகார் மனு அ.சா.ஆ.2 ஆகவும், அவர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும், புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கை அசலை நிதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும் அதன் மற்ற நகல்களை மேல் விசாரனைக்காக ஆய்வளர் வசம் ஒப்படைத்தாகவும், அன்றைய தினமே விசாரனைக்கு எடுத்துக்கொண்டு வழக்கு சம்பவம் இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும், எதிரிகளை தேடிவந்த நிலையில் வண்டியூர் சங்கு நகர் அய்யனார் கோவில் அருகே 1, 2, 4 ஆகிய எதிரிகள் இருந்தது அறியவந்ததாகவும், அதே இடத்தில் அவர்களை கைது செய்தும்

எதிரிகளில் முதலாவது எதிரியான தினேஷ்குமார் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவுசெய்ததாகவும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 1வது எதிரி எடுத்து அஜர் செய்த கத்திகளை அத்தாட்சியில் கைப்பற்றியதாகவும், அவர் பெற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.6 ஆகவும், அந்த அத்தாட்சி அ.சா.ஆ.7 ஆகவும், வழக்கு சொத்தாக கைப்பற்றப்பட்ட கத்தி சா.பொ.1 ஆகவும், அன்றைய தினமே சாட்சிகள் மணிகண்டன், ரமேஷ், ஆறுமுகக்குமார், மைதீன், ரமேஷ்கணி, நாகராஜன், காளிமுத்து, சார்பு ஆய்வாளர் பூமிநாதன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தாகவும், வழக்கின் விசாரணையில் வழக்கு சம்பவம் உண்மையை அறிந்து இந்த வழக்கின் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 392 உ/இ 397 மற்றும் 506(2)ன்படி அண்ணாநகர் காவல்நிலைய ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார். அத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடித்து கொள்ளப்பட்டது.

8) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து எதிரிக்கு பாதகமாக அமைந்த சாட்சியங்களை தொகுத்து கு.வி.மு.ச.பிரிவு 313(1)(ஆ)–ன்படி எதிரியிடம் வினவியபோது, எதிரி அரசு தரப்பு சாட்சியம் பொய் என்று மறுத்துள்ளார். எதிரி தரப்பில் சாட்சிகள் எவரும் விசாரிக்கப்படவில்லை.

9) இந்நிலையில் வழக்கில் எதிரி மீது வனையப்பட்டுள்ள இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 392 உ/இ 397 மற்றும் 506(ii)ன் படியான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் தகுநிலை ஐயப்பாட்டிற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே இங்கு தீர்வு காண வேண்டிய

பிரச்சனையாக இருக்கிறது.

**<u>தீர்வு:–</u>**

10) இவ்வழக்கின் வாதியான மணிகண்டன் என்பவர் மதுரை மாட்டுத்தாவணி MGR பேருந்து நிலையத்தில் பூ வியாபாரம் செய்து விட்டு 05.01.2020ஆம் தேதி காலை சுமார் 07.00 மணியளவில் வாதி அவரது வீட்டிற்கு தேவையான காய்கறிகளை வாங்குவதற்காக வாக்கர்ஸ் பார்க் ரோடு காய்கறி மார்கெட் கிழக்கு நுழைவு வாயில் அருகே நடந்து சென்று கொண்டிருந்தபோது எதிரி ராஜ்குமார் என்ற கேரளா ராஜ்குமார் மற்றும் மூலவழக்கில் இருந்து பிரித்து எடுக்கப்பட்ட எதிரிகளாகிய தினேஷ்குமார், முத்துக்குமார், இறந்துபோன அஜித்குமார் என்ற அஜித் ஆகிய நான்கு பேரும் வாதியை பார்த்து டேய் நாங்க தண்ணியடிக்கணும் ஒழுங்கா கையில இருக்குற பணத்தை எடுடா என்று மிரட்ட வாதி பணம் தர மறுக்கவே 1வது எதிரி தினேஷ்குமார் இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து வாதியின் வயிற்றில் வைத்து அழுத்தியும், 2வது எதிரி முத்துக்குமார் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து வாதியின் நெஞ்சில் வைத்து அழுத்தி மரணபயம் ஏற்படுத்தியும், எதிரிகளாகிய முத்துக்குமார், கேரளா ராஜ்குமார் மற்றும் அஜீத்குமார் ஆகியோர் வாதியை பார்த்து நாங்க பல கேசுல ஜெயிலுக்கு போய்ட்டு வந்தவங்க எங்களுக்கே பணம் இல்லைன்னு சொல்றீயா என்று சொல்லிக்கொண்டே வாதியின் சட்டை பையில் வைத்திருந்த ரூ.1,325/– பணத்தை வலுக்கட்டாயமாக பறித்துக்கொண்டும், மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக, இவ்வழக்கின் எதிரி கையில் வைத்திருந்த கத்தியை காண்பித்து எவனாவது பிடிக்க வந்தால் உங்களையும் குத்தி குடலை உருவிவிடுவோம் என்று கொலை

மிரட்டில் விடுத்ததால் நடவடிக்கை எடுக்கும்படி வாதி கொடுத்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்து வாதியை விசாரித்தபோது அவருடைய புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளையே வாக்குமூலமாக அளித்ததாகவும் அரசு தரப்பு வழக்கு அமைந்திருந்தபோதிலும் புகார்தாரரான மணிகண்டன் என்பவர் இந்த வழக்கில் அ.சா.1 ஆக சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.1 அவர் காவல்நிலையத்தில் சமர்ப்பித்துள்ள புகார் மனுவிலும், போலிஸ் விசாரணையின்போதும் சம்பவம் குறித்து கூறிவிட்டு அ.சா.1 தம்முடைய நீதிமன்ற சாட்சியத்தின் போது ஆஜர் எதிரியை தமக்கு தெரியாது என்றும், அ.சா.ஆ.1 புகார் மனுவில் உள்ள கையெழுத்து மட்டும் தம்முடையது என்றும் வழக்கு சம்பந்தமாக தமக்கு எதுவும் தெரியாது என்றும் அரசு தரப்பு வழக்கை சற்றும் ஆதரிக்காமல் முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார். அதனால் அ.சா.1 சாட்சி அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். ஆனாலும், அ.சா.1 சாட்சியும் குறுக்கு விசாரணையின் மூலமாக அரசு தரப்பு வழக்கானது தெளிவாக நிரூபிக்கப்பட்டிருக்கவில்லை.

11) பாதிக்கப்பட்ட நபரான அ.சா.1 சாட்சியே அரசு தரப்பு வழக்கை ஆதரிக்காமல் சாட்சியம் அளித்துள்ள சூழ்நிலையில் மற்ற சாட்சிகளான சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகள் யாரையும் அரசு தரப்பில் சாட்சியாக விசாரிக்கப்படாத நிலையில் தனிநபர் சாட்சிகளை விசாரித்து பயனில்லை என்று கருதி அரசு தரப்பில் இந்த வழக்கின் புலன் விசாரணை மேற்கொண்ட காவல் ஆய்வாளர் ஆவணங்களின்படி தற்போதைய காவல் ஆய்வாளர் அ.சா.2 சாட்சியாக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அ.சா.2 சாட்சி தம்முடைய சாட்சியத்தில் 05.01.2020ம் தேதி நிலையப் பொறுப்பில்

இருந்த ஆய்வாளர் இந்த வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், எதிரிகளை தேடிவந்த நிலையில் வண்டியூர் சங்கு நகர் அய்யனார் கோவில் அருகே 1,2,4 ஆகிய எதிரிகள் இருந்தது தெரிந்து வந்து, அதே இடத்தில் எதிரிகளை கைது செய்து அவர்கள் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி எடுத்து ஆஜர் செய்த சா.பொ.1 கத்திகளை அத்தாட்சி சாட்சிகள் முன்னிலையில் எதிரிகளிடமிருந்து கைப்பற்றியதாகவும், சாட்சியம் அளித்திருந்தபோதிலும், அ.சா.2ன் மேற்படி சாட்சியத்தை தொடர்புபடுத்தும் வகையில் வேறு தனிப்பட்ட நபர்கள் எவரும் வழக்கு சங்கதி குறித்து சாட்சியம் எதுவும் அளித்திருக்காததால் அ.சா.2ன் சாட்சியத்தை அப்படியே எடுத்துக்கொண்டு எதிரிக்கு எதிரான வழக்கு அரசு தரப்பில் தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளதாக கருத இயலவில்லை. எதிரியிடமிருந்து அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் வழக்கு சான்று பொருளான பட்டா கத்தி மட்டும் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக அ.சா.2 சாட்சியம் அளித்திருந்தபோதிலும், புகார்தாரரான அ.சா.1-யிடம் இருந்து எதிரியால் பறித்துச் செல்லப்பட்டதாக கூறும் ரூ.1,325/-யும் பணத்தை அ.சா.2 சாட்சி எதிரியிடமிருந்து கைப்பற்றினாரா என்பது குறித்து அவர் தனது நீதிமன்ற சாட்சியத்தின் மூலம் அந்த சங்கதியை வெளிப்படுத்தியிருக்கவில்லை. வழக்கு சான்று பொருளை அத்தாட்சி சாட்சிகள் முன்னிலையில் அ.சா.2 கைப்பற்றியதாக கூறியிருந்தபோதிலும் மேற்படி அத்தாட்சி சாட்சிகள் எவரும் இந்த வழக்கில் அரசு தரப்பு சாட்சிகளாக விசாரிக்கப்படாத

நிலையில் சா.பொ.1 கத்தியானது இந்திய சாட்சிய சட்டத்தின் அடிப்படையில் அ.சா.2 சாட்சியால் சட்டமுறையாக கைப்பற்றியிருக்கவில்லை என்பதாகவே கருத இடம் இருக்கிறது. புகார்தாரருக்கு எதிராக எதிரிகளால் மேற்கொள்ளப்பட்ட குற்ற சங்கதி குறித்து அரசு தரப்பு வழக்கை ஆதரிக்கும் வகையில் இந்த வழக்கில் சாட்சிகள் எவரும் சாட்சியம் அளித்திருக்காத சூழ்நிலையில் எதிரிக்கு எதிராக அரசு தரப்பு வழக்கானது சந்தேகத்திற்கிடமில்லாமல் நிரூபிக்கப்பட்டிருக்கவில்லை என்று கருதி இந்த வழக்கின் எதிரியை வழக்கு குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுவிக்க வேண்டும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவில், எதிரியை இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 392 உ/இ 397 மற்றும் 506(ii)ன்படி தண்டிக்கப்படத்தக்க குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து எதிரியை கு.வி.மு.ச. பிரிவு 235(1)ன்கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

S.C.No.450/2020 வழக்கில் அரசு தரப்பில் சமர்பிக்கப்பட்டு இந்நீதிமன்றத்தால் எடுக்கப்பட்டுள்ள RPR.No.72/2025ல் கண்ட சா.பொ.I – சுமார் 23 செ.மீ நீளமுள்ள கத்தி, சுமார் 19 செ.மீ நீளமுள்ள கத்தி ஆகியவை பயனற்றது என்பதால் அவைகளை மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் அழிக்கவும் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026ஆம் ஆண்டு ஜுன் திங்கள் புதன்கிழமை 24ஆம் நாள் என்னால் கையொப்பம் இடப்பட்டு

திறந்த நீதிமன்றத்தில் வைத்து அவையறியப்பகரப்பட்டது.

SARAVANABHAVAN Digitally signed by SARAVANABHAVAN Date: 2026.06.24 19:13:05 +0400

முதன்மை உதவி அமர்வு நீதிபதி,
மதுரை.

**அரசு தரப்பு சாட்சிகள்**

| | Witnesses | Chief | Cross |
|---|---|---|---|
| அ.த.சா.1 | மணிகண்டன் | 04.02.2026 | 04.02.2026 |
| அ.த.சா.2 | சிவக்குமார் (ஆய்வாளர்) | 24.06.2026 | 24.06.2026 |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்**

அ.த.சா.ஆ.1 05.01.2020 தேதியிட்ட புகார் மனுவில் உள்ள மணிகண்டன் என்பவரின் கையொப்பம்

அ.த.சா.ஆ.2 05.01.2020 தேதியிட்ட புகார் மனு

அ.த.சா.ஆ.3 05.01.2020 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை

அ.த.சா.ஆ.4 பார்வை மகஜர்

அ.த.சா.ஆ.5 மாதிரி வரைபடம்

அ.த.சா.ஆ.6 05.01.2020 தேதியிட்ட ஒப்புதல் வாக்குமூலம்

அ.த.சா.ஆ.7 அத்தாட்சி

**சான்று பொருள்:-**

சா.பொ.1 கத்தி

எதிரி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் – இல்லை.

SARAVANABHAVAN Digitally signed by SARAVANABHAVAN Date: 2026.06.24 19:13:12 +0400

முதன்மை உதவி அமர்வு நீதிபதி,
மதுரை.

-----------------------------

**முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம்**
மதுரை.
**அமர்வு வழக்கு எண்.446/2022**
**தீர்ப்புரை**
நாள்: **24.06.2026**

-----------------------------